# குறுந்தொகைப் பாடல்களில் வாழ்வியல் விழுமியங்கள்

**முனைவர் உ.கருப்பத்தேவன்**
உதவிப் பேராசிரியர்
தலைவர், இலக்கியத்திறனாய்வுத்துறை (பொறு)
தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

**ப. வேணி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியற்புலம் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7735

***ஆய்வுச் சுருக்கம்***
*நிலமே திணைப் பகுப்பின் அடிப்படையாகும். அவ்வவ் நிலங்களில் சிறந்து விளங்கிய பூக்களின் பெயர்கள் அந்தந்த நிலங்களுக்கு ஆகுபெயராயின. களவு, கற்பு என்னும் கைக்கோள் அகப்பாடல்களின் ஐந்திணைகளுக்கும் பொதுவானதாகும். இதுவே அகத்திணை மரபின் அடிப்படையாகும். 'குறுந்தொகைப் பாடல்களில் வாழ்வியல் விழுமியங்கள்" என்னும் இவ்வாய்வுக் கட்டுரையில் குறுந்தொகைப் பாடல்களில் நிமித்தங்கள், 'ஏழு" என்ற எண் குறித்த செய்திகள், 'நல்லூழ்" வழிப்பட்ட வாழ்க்கை, பொருள்ளவழிப்பட்ட வாழ்க்கை நெறி, மக்கள் வாழ்க்கையில் சொர்க்கம், நரகம் குறித்த நம்பிக்கைகள், இம்மை, மறுமை நம்பிக்கைகள், ஊழ் நம்பிக்கைகள் குறித்த குறுந்தொகைப் பாடல்களில் காணலாகும் வாழ்வியல் விழுமியங்கள் தக்க சான்றுகளுடன் விளக்கமாக ஆராய்ந்துகூறப்பெற்றுள்ளன.*

## முன்னுரை

குறுந்தொகைப் பாடல்களை அகத்திணை மரபில் இயற்றியுள்ள புலவர்கள் அக்காலச் சமுதாய மக்களின் வாழ்ககையில் உயரிய சிந்தனைகளாகவும் மதிப்புகளாகவும் நிலவிய மிகச்சிறந்த வாழ்க்கைக் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் ஆங்காங்கே அகமாந்தர் கூற்றுகளில் பாடல்களின் மையக் கருத்துக்களுக்கேற்ப சிறுசிறு குறிப்புகளாகப் பதிவு செய்துள்ளனர். இவைகுறுந்தொகைப் பாடல்கள் இயற்றப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஐந்திணைமக்களின் வாழ்வியல் கூறுகளாகவும், சமுதாய ஏற்புடைமையைப் பெற்றவாழ்வியல் நெறிகளாகவும் அமைந்துள்ளன என்பதை சுருக்கமாகவும் தெரிவாகவும், விளக்கிக் கூறுவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

## குறுந்தொகைப் பாடல்களில் நிமித்தங்கள்

வருங்கால நிலைமைகளை முன்னறிவிக்கும் அறிகுறியாக நிமித்தங்களைமக்கள் இனங்கள் தொன்றுதொட்டு இன்றுவரையில் தம் வாழ்க்கையில் கைக்கொண்டிருக்கின்றன. செயல்களில் நிகழும் நன்மை தீமைகளை உறுதிசெய்யும் நிலையில் அவை நன்னிமித்தம், தீநிமித்தம் என இருவகைப்படுகின்றன. நிமித்தங்கள் பெரும்பாலும் மனிதமனம் முடிவெடுக்க இயலாத சூழ்நிலைகளில் தோன்றுகின்றன. மனித ஆற்றலுக்கு உட்பட்ட செயல்களுக்கும் இயற்கை நிகழ்வுகளுக்கும் ஒருவகைத் தொடர்பு இருப்பதாக மனிதயினம் கற்பித்துக் கொண்ட நிலையில் நிமித்தக்கூறுகள் தோற்றம் பெற்றதாகக் கருதலாம். காலப்போக்கில் வாழ்வியலில் தொடர்ந்தநிகழ்ச்சிகளோடு இயற்கை நிகழ்வுகளை இயைத்து நோக்கப்பட்ட நிலையில் அவை நிமித்தங்களாக வடிவம் பெற்றுள்ளன. பழந்தமிழர் நிமித்தங்களை புன், நிமித்தம் ஆகிய சொற்களால் குறித்துள்ளனர்.

நிமித்தங்கள் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. இதனை இ.சுந்தரமூர்த்தி 'தம் செயல்களுக்கும் நம் வயப்படாத இயற்கையின் நிகழ்வுகளுக்கும் தொடர்பு காட்டுவது நிமித்தங்களின் செயற்பாடாகும். இயற்கை நிகழ்வுகளுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம். எனக் கூறியுள்ளார். நிமித்தங்கள் பொதுவாக அச்சத்தின் அடிப்படையில் தோன்றி பாதுகாப்பு உணர்வினால் வளர்க்கப்பட்டன.

நிமித்தக்கூறுகள் வடிவம் பெறுவதற்கு நினைக்கத் தூண்டுகிறது. காக்கை, ஆந்தை ஆகிய பறவைகளே நிமித்தக் காரணிகளாகக் கொள்ளப்பட்டன. சங்கப் பாடல்களில் பல்லிநிமித்தமும் நல்லோர்சொல்லும் 'புள்' என்றே கூறப்பெற்றுள்ளன. நிமித்தத்தைக் கூறும் 'சகுனம்' என்பதுவடமொழிச்சொல்லாகும். அச்சொல்லும் பறவையினங்களையே குறிக்கும்.

குறுந்தொகைப் பாடல்களில் பரவலாகப் பலவகையான நிமித்தங்கள் கூறப்பெற்றுள்ளன.

கொற்றன் என்னும் சங்கப்புலவர் குறுந்தொகையின் முல்லைத்திணையில் இயற்றிய பாடலில் தலைவன் பிரிவினால் வருந்தும் தலைவிஅவன் வருகையை எதிர்நோக்கித் தன் இல்லத்தின் சுவரில் கோடிட்டு அந்நாட்களை எண்ணிப் பார்க்கின்றான். தலைவனைப் பிரிந்துதனிமையில் இருக்கும் தலைவி, தலைவனின் வருகையை எதிர்நோக்கித் தனக்குத்தானே குறிபார்த்துக் கொள்ளும் ஒரு குறிமுறையாகும். இது "ஆழியிழைத்தல்" எனப்படுகின்றது இதனைப் பிற்கால இலக்கியங்கள் 'கூடலிழைத்தல்' என்கின்றன. குறுந்தொகைப் பாடலடிகள் வருமாறு,

**'வீழ்கிழை நெகிழ விம்மி ஈங்கே**
**எறிகண் பேதுறல் ஆய்கோடு இட்டு**
**சவர்வாய் பற்றும் நின்படர் சேண்நீங்க**
**வருவேம் என்ற பருவம் உதுக்காண'**

**(குறுந்.பா.எண்.358:1-4)**

வருங்காலச் செயலை விரிவாக முன்னரே அறிவிப்பது 'விரிச்சி' யாகும். பண்டைத் தமிழர்கள் ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் பிறர் கூறும் சொற்களை நிமித்தங்களாகக் கொண்டுள்ளனர். சு.வித் தியானந்தன் விரிச்சிகேட்டலை 'அசரீரி' எனக் குறிப்பிட்டுள்ளார். கொற்றன் என்னும் சங்கப்புலவர் குறுந்தொகையில் இயற்றிய பாலைத்திணைப் பாடலில்,

**'விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
**கடனும் புணாம் கைந்நூல் யாவாம்**
**புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்"**

**(குறுந்.பா.எண்.218:1-3)**

என விரிச்சி கேட்கும் செய்தி இடம்பெற்றுள்ளது. அள்ளூர் நன்முல்லையார் குறுந்தொகையில் இயற்றியப் பாலைத் திணைப் பாடலில் ஒத்தி நிமித்தம் கூறப் பெற்றுள்ளது. தலைவன் பொருட் பிரிவில் தலைவி தோழியிடம்,

**'வேதின வெரிதின் ஓதி முதுபோத்த**
**ஆறுசெல் மாக்கள் புள்கொள பொருந்தும்"**
***(குறுந்.பா.எண்.140:1-2)***

என்கிறாள். பாலை வழியில் செல்வோர்க்கு ஒத்தியைத் தவிர நிமித்தம் காட்டும் பிற உயிரினங்கள் இல்லை. தலைவி முதுபொத்தாகிய நிமித்தம் தனக்குநன்றாகவே அமையும் என்கிறாள்.

பாலைப் பாடிய பெருங்கடுங்கோ என்னும் சங்கப்புலவர் குறுந்தொகையின் பாலைத் திணையில் இயற்றிய பின்வரும் பாடலில் பல்லிசொற் கேட்டல் நன்னிமித்தமாகக் கூறப்பெற்றுள்ளன. அப்பாடலடிகள் வருமாறு,

**'செங்காற்பல்லி தன்துணை பயிரும**
**அக்காற் கள்ளிஅம் காடி றந்தோரே"**
***(குறுந்.16:4-5)***

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்னும் சங்கப்புலவர் குறுந்தொகையின் முல்லைத்திணையின் இயற்றிய பாடலில் காக்கை நிமித்தம் கூறப்பெற்றுள்ளன. இப்பாடலின் தலைவி காக்கை கரைதலை தலைவன் மீள்வதற்கான நன்னிமித்தமாக் கொண்டு அக்காக்கைக்குத் தெய்வத்தை வழிபட்டு இடும்பலி உணவைச் சிறப்பு உணவாகக் கொடுக்க நினைக்கின்றாள். அப்பாடலடிகள் வருமாறு,

**'......... ......... ...... என்தோழி**
**பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"**
***(குறுந்.210:4-6)***

இப்பாடலைப் பாடிய புலவர் 'காக்கைபாடினியார் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளார்.

தலைவன் வரவிற்கு நல்ல நிமித்தமாயினவற்றைக் கண்டு ஆற்றாளாகிய தலைவியைத் தோழி ஆற்றுவிப்பதாகக் குறுந்தொகையில் பாலைத்திணையில் கல்லாடனார் என்னும் சங்கப்புலவர் இயற்றிய பின்வரும் பாடல்கள் அமைந்துள்ளது.

**'குருகும் இருவிசும்பு இவரும், புதலும்**
**வரிவண்டு ஊத வாய் நெகிழ்ந்தனவே**
**கரிவளைப் பொலித்த தோளும் செற்றும்**
**வருவர்கொல் வாழி தோழி! பொருவார்**
**மண்எடுத்து உண்ணும் அண்ணல் யானை**
**வண்தேர்த் தொண்டையர் வழைஅமல்**
**அடுக்கத்து இன்றுஇல் ஓர்ஆ விலங்கிய**
**புன்தாள் ஓமைய சுரன் இறந்தோரே"**
***(குறுந்.பா.எண்.260)***

இப்பாடலில் விசும்பில் குருகு இவர்தல், புதரில் பூ மலர்தல் தோளில் வளைசெறிதல் ஆகியன தலைவிக்கு நன்னிமித்தமாகவும் இடைச்சுரத்தில் கன்றை என்ற பசு எதிர்படுத்தல் தலைவனுக்குத் தீ நிமித்தமாகவும் கூறப்பெற்றுள்ளன. ஆயினும் தோழி தலைவியைத் தலைவன் அதனைப் பொருட்படுத்தாமல் மீள்வான் என ஆற்றுப்படுத்துகின்றாள்.

கபிலர் என்னும் சங்கப்புலவர் குறுந்தொகையில் குறிஞ்சித்திணையில் இயற்றிய பின்வரும் பாடலில் தலைவி மயில் அகவுதலைநன்னியித்தமாகக் கொள்கிறாள். தலைவி தலைவனின் இரக்கப்பண்பினை நினைத்துப் பெருமிதம் கொள்கிறாள்.

**'கலிமழை கெழீஇய கான்யாற்று இருகரை**
**ஒலிதெடும் பீலி துயல்வர இயலி**
**ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு**
**நயந்தனன் கொண்ட கேண்மை**
**பயந்தக் காலும் பயப்பு ஒல்லாதே""**
***(குறுந்.பா.எண்.264)***

என்பது அகப்பாடலாகும்.

### 'எழு" என்ற எண் குறித்த செய்திகள்

குறுந்தொகையில் மூன்று பாடல்களில் 'ஏழு" என்ற எண் குறித்தசெய்திகள் இடம் பெற்றுள்ளன. பருவம் கண்டு ஆற்றாளாகிய தலைவி கூறுவதாகமுல்லைத்திணையில் பரணர் இயற்றிய பாடலில் 'ஏழு" என்ற எண் பயின்றுவந்துள்ளது.

**'ஆற்றயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து**
**எழுருனிறு மிதித்த ஒருபழம் போலக்**
**குழைய கொயோர் நாவே**
**காதல ரகல கல்லென்றவ்வே"**
***(குறுந்.பா.எண்.24:3-6)***

இப்பாடலில் தலைவி தலைவன் தன்னை நீங்கியமையால் அது குறித்துப் பழிதூற்றும் மகளிரின் நாக்குகள் குழைவின்றி அவர் தூற்றி ஆற்றின் அருகேஉயர்ந்து வளர்ந்துள்ள அத்திமரத்தின் ஒரு பழத்தை ஏழு நண்டுகள் பற்றிகுழைத்துச் சிதைத்தைப் போல தான் வருந்துமாறு 'கல்' என்ற முழக்கத்தை ஏற்படுத்தின என்கின்றனர்.

இப்பாடலில் 'குளிர்' என்னும் சொல் நண்டு என்னும் பொருளுடையது. 'ஏழு' என்ற சொல் பன்மையைக் குறிக்கும் 'குளிர்' என்பதை ஏடு எழுதுவோர் தவறுதலாக 'குளிறு' என எழுதியிருக்கலாம். வரைவிடை ஆற்றாள் எனக்கவன்றதோழிக்குத் தலைவி கூறுவதாக கச்சிப்பேட்டு நன்னாகையார் என்னும் சங்கப்புலவர் இயற்றிய நெய்தல் பாடலிலும் 'ஏழ' (ஏழு) என்ற எண் பயின்றுவந்துள்ளது.

> **'ஏழூர்ப் பொதுவினைக்கு ஒரூர்யாத்த**
> **உலைவாங்கு மிதிதோல் போலத்**
> **தலைவரம் பறியாது வருத்தும் என்னெஞ்சே"**
> **(குறுந்.பா.எண்.172:5-7)**

இப்பாடலில் தலைவி ஏழு ஊரில் வாழும் மக்களுக்காகப் பொதுவாகஉள்ள ஒரு தொழிலில் ஒரூர்க்கண் கொல்லனால் கட்டப்பட்ட விலித்தமுக்கும் துருத்தியின் தோல்போல எல்லை முடிவில்லாமல் தன் நெஞ்சம் வருத்தமடைவதாகக் கூறுகின்றான். பிரிந்து மீண்ட தலைவன் தோழியை நன்கு ஆற்றுவித்தாய் எனப் பாராட்டியபோது தோழி அத்தலைவனிடம்,

> **'திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**
> **பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி**
> **முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
> **எழுகலத்து ஏந்தினும் சிறிது, என்தோழி**
> **பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு**
> **விருந்துவரக் கரைநத் காக்கையது பலியே"**
> **(குறுந்.பா.எண்.210)**

எனக் கூறுகின்றாள். இப்பாடலில் தோழி ஏழாகக்கூறும் அக்கால மரபு பற்றிக் காக்கைக்கு ஏழுகலங்களில் வெண்ணெய் வெஞ்சோறு பலியாகக் கொடுத்ததைக் கூறுகின்றான். காக்கை கரைதலாகிய நிமித்தமும் அதன் பயனாகிய தலைவன் வரவும் உடன் நிகழ்ந்தன. தலைவன் உடனுறைந்த காலத்துத் தலைவியின் பொலிவுபெருந்தோள்" எனக்கூறப்பட்டது. தலைவன் தன்னைப் பாராட்டுவதை விரும்பாத தோழி அவன் வருகையைக் கரைந்து கூறிய காக்கையைப் பாராட்டுகின்றான். காக்கை கரைதலை நம்பிய தலைவியும் பாராட்டிற்குஉரியவள் ஆகின்றாள்.

**'நல்லூழ" வழிபட்ட வாழ்க்கை**

'இடைச்சுரத்துக் கண்டோர் தம்முன் கூறியது" என்னும் துறையில் குறுந்தொகையின் பாலைத்திணையில் மோதாசனார் என்னும் சங்கப்புலவர் இயற்றிய குறுந்தொகைப் பாடலில் 'நல்லூழ்" வழிப்பட்ட வாழ்க்கையின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளன.

> **'இவன் இவன் ஐம்பால் பற்றவும் இவள் இவன்**
> **புன்தலை ஓரி வாங்குதன் பரியவும்**
> **காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது,**
> **ஏதிலிசறுகெரு உறுப மன்னோ**
> **நல்லவை மன்றம்ம பாலே, மெல்லியல்**
> **துணைமலிப் பிணையல் லன்ன இவர்**
> **மணமகிழ் இருக்கை காட்டி யோயே"**
> **(குறுந்.229)**

இப்பாடலில் கண்டோர், தலைவன் தலைவியை உடன்போக்கில் இணைத்த ஊழ்வினையாகிய நல்லூழ் வலிமை மிக்கது எனப் போற்றுகின்றனர். இளமைக் காலத்தில் காதலுடன் இருப்பவர்கள் கூட மண முடித்து இல்லறம் மேற்கொண்ட பின்னர் தம்முன் பகைத்துப் பிரிதல் உலகியல் இயல்பாகும். பருவம் வாராநிலையில் தம்முன் போரிட்டுக் கொண்டதலைவனும் தலைவியரும், பருவம் வந்ததும் தம் உள்ளங்களில் காதலை ஏற்படுத்திக் கொண்டு இணைவது உண்டு. அவ்வாறு அவர்களை உடன்போக்குச் செய்ய ஊக்குவித்த ஊழ்வினை மிகவும் நன்மை செய்வது, ஊழ்வழிப்பட்டதே

வாழ்க்கையெனத் தலைவன் - தலைவியை உடன் போக்கில் கண்டோர் தம்முன் கூறிக்கொள்கின்றனர்.

**பொருள்வழிப்பட்ட வாழ்க்கை நெறி**

பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் சங்கப்புலவர் குறுந்தொகையின் பாலைத் திணையில் இயற்றிய பின்வரும் பாடலில் வாழ்க்கைக்குப் பெர்ருளேஅடிப்படை பொருள் வழிப்பட்டதே வாழ்க்கை என்பதை அழுத்தமாகக் கூறியுள்ளார்.

***'உள்ளது சிதைப்போர் உளவெரனப் படாஅர்***
***இல்லோர் வாழ்க்கை இரவினும் இனிவெனச்***
***சொல்லிய வன்மை தெனியக் காட்டிச்***
***சென்றனர் வாழி தோழி என்றும்***
***கூற்றத் தன்ன கொலைவேல் மறவர்***
***ஆற்றயிருந்து அல்கி வழங்குநர்ச் செகுத்த***
***படுமுடைப் பருந்து பார்த்திருக்கும்***
***நெடுமூதிடைய நீரில் ஆறே"***

***(குறுந்.283)***

ஒருவன் தன் முயற்சியால் உழைத்துத் தந்த பொருளைப் பகுத்துண்டுவாழ்வதைத் தம் வாழ்க்கை நோக்கமாகக் கொள்ள வேண்டும். தாயத்தால் வந்தபொருளைப் போற்றிக் காப்பது ஒன்றே அவன் கடமை. அதனைக் குறைக்கவும் அழிக்கவும் எவ்வகையிலும் அவனுக்கு உரிமை இல்லை. முன்னோர் தேடித் தொகுத்த பொருளை ஒருவன் தன் இன்பத்திற்காகப் பயன்படுத்தினால் அவன் இறந்தவனாகவே கருதப்படுவான். தாயத்தை அழித்து உயிர்வாழ்வது இரந்துண்டு வாழ்வதை விட இழிவானது. தலைவன் இவ்வாறுமுயற்சியின் அருமை இரத்தலின் இனிவரவினைத் தலைவிக்குக் கூறி ஆள்வினை உடையவனாய் அவளைப் பிரிந்து பொருள் தேடச் சென்றான்.

தலைவி தலைவனின் நோக்கத்தைப் பாராட்டினாலும், அவன் சென்ற பாலைநில வழியின் கொடுமையை நினைத்து வருந்தினாள். தலைவன் தன் வலிமையால் ஆறலைக் கள்வர்களின் கொலைச் செயலை வென்றாலும் பாலை நிலத்தில் நீரின்மையால் என்ன செய்வனோ எனக் கலங்கினான்.

ஆயினும் தலைவன் பொருள் வழிப்பட்ட வாழ்க்கையின் முதன்மையை உணர்ந்து இல்லோனாய் வாழ்வதைவிடச் சாதல் மேலானது என்னும் கொள்கையில் வலியன் என்பதால், அதைக்கேட்கும் தலைவி வலிமையற்றவன் என்பது புலனாகிறது.

**மக்கள் வாழ்க்கையில் சொர்க்கம், நரகம் குறித்த நம்பிக்கைகள்**

குறுந்தொகைப் பாடல்களில் ஆங்காங்கே பழந்தமிழ் மக்களின் சொர்க்கம், நரகம் குறித்த நம்பிக்கைகளும் சிறுசிறு குறிப்புக்களாகக் காணக்கிடக்கின்றன. வெண்பூதன் என்னும் சங்கப்புலவர் குறுந்தொகையில் இயற்றிய குறிஞ்சித் திணைப்பாடல் தலைவன் தலைவியை மணந்துகொள்ள வருவான் எனக்கூறிய செவிலியைத் தோழி பாராட்டிக் கூறுதாக அமைந்துள்ளது. தலைவன் களவினால் பெறும் இன்பத்தை தம் இல்லத்திலிருந்து தாம் பகுத்துண்டது போல இன்பம் தருவது என மயங்கி நின்றான். வரைவு நீட்டித்த தலைவன் களவின்பத்தையே துறக்க உலகின் இன்பமாக நினைத்தான். அத்தலைவனிடம் தோழி பகுத்துண்டார் பெறும்பயனைத் தலைவியை வரைந்துகொண்டு பெறுக என வரைவு கடாவினான். அவன் தலைவனுக்குப் "பெரும்பெயர் உலகம்" களவினால் பெற இயலாதது எனவும், வரைந்து இல்லறம் செய்வோர்க்கே உரியது எனவும் உணர்த்தினான். இதனால் தலைவன் தலைவியை மணந்து கொள்ள உடன்பட்டான். அப்பாடல் வருமாறு.

***"அரும்பெறல் அமிழ்தம் ஆர்பத் மாகப்***
***பெரும்பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை***
***தம் இல் தமது உண்டன்ன சினைதொறும்***
***தீம்பழம் தூங்கும் பலவின்***
***ஓங்குமலை நாடனை வரும் என்றோளே"***

***(குறுந்.பா.எண்.83)***

இப்பாடலில் துறக்கம் (சொர்க்கம்) பெரும்பெயர் உலகமாகக் கூறப் பெற்றுள்ளது. கபிலர் இயற்றிய குறுந்தொகையின் குறிஞ்சிப்பாடலில் தலைவி தோழியிடம் மாலையில் அவர் மலையில் மழை பெய்தலால் மணம் கமழும் ஆற்றில் விடியற்காலையில் வந்த முழுக்கிழங்குடன் கூடிய காந்தளை அதன்மெல்லிய இலைகள் குழையும்படி என் மார்பில் அணைத்ததையும் அதைக்கொண்டுவந்து இல்லத்தில் நட்டு வைத்து வளர்த்ததையும் தாய் கடிந்து விலக்கவில்லை. ஆதலால் நம் அன்னைக்கு உயர்ந்த நிலைத்த உலகமான வீடுபேறு கைம்மாறாகக் கிடைக்கும் என்கிறான். அப்பாடல் வருமாறு.

**'அம்ம வாழி தோழி! அன்னைக்கு**
**உயர்நிலை உலகமும் சிறிதால், அவர்மலை**
**மாலைப்பெய்த மணம்கமழ் உந்தியொடு**
**காலை வந்த முழுமுதற் காந்தள்**
**மெல்லிலை குழைய முயங்கலும**
**இல்லுய்த்து நடுதலும் கடியா தோளே"**
**(குறுந்.பா.எண்:361)**

இப்பாடலில் துறக்கமாகிய சொர்க்கம் 'உயர்நிலை உலகம்" எனக் கூறப்பெற்றுள்ளது.

பரணர் இயற்றிய குறுந்தொகையின் குறிஞ்சித்தணைப் பாடலில் இரவுக்குறியில் தலைவனைச் சந்திக்க இயலாமல் இரவு முழுவதும் துயலாமல் தன்னை கடிகாவல் செய்த அன்னை, பெண்கொலை செய்தநன்னனைப் போல 'வரையாநிரையம்" (நரகம்) செல்லவேண்டுமெனத் தலை விசபிக்கின்றாள். அப்பாடலடிகள் வருமாறு.

**'பெண்கொலை புரிந்த நன்னன் போல**
**வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை"**
**(குறுந்.பா.எண்.292:5-6)**

இப்பாடலடிகளில் நரகமானது 'நிரையம்" என்றும் வடமொழிச் சொல்லால் குறிக்கப்பெற்றுள்ளது.

## இம்மை, மறுமை நம்பிக்கைகள்

குறுந்தொகைப் பாடல்களில் ஆங்காங்கே பழந்தமிழ் மக்களின் இம்மை- மறுமை குறித்த நம்பிக்கைகளும் சிறுசிறு குறிப்புக்களாகக் காணப்படுகின்றன. அம்மூவனார் என்னும் சங்கப்புலவர் குறுந்தொகை நெய்தல் திணையில் இயற்றியபின்வரும் பாடலில் இம்மை, மறுமை பற்றிய பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

**'அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
**மணிக்கேழ் வன்ன மாநீர்ச் சேர்ப்ப!**
**நீ யாகியர் என் கணவனை**
**யான் ஆகியர் நின்னெஞ்சு நேர்பவளே"**
**(குறுந்.பா.எண்.49)**

இப்பாடலில் தலைவன் - தலைவியின் அன்புடைமை பிறவிகள்தோறும் தொடரும் எனக் கூறப்பெற்றுள்ளது. இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கைகளும் மறுபிறப்புஉண்டு என்னும் சிந்தனையும், வினைப்பயன் தொடர்வது குறித்த பழந்தமிழர் சிந்தனையும் இப்பாடலில் நுணுக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. சிறைக்குடி ஆந்தையார் என்னும் சங்கப்புலவர் இயற்றிய குறுந்தொகையின் பின்வரும் நெய்தல் திணைப்பாடலில் தலைவி தன் தோழியிடம் தலைவனைப் பிரிந்து உயிர்வாழ்வதை விடச் சாதலே தக்கது எனக் கூறுகின்றான்.

**'புயிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன**
**நீருறை மகன்றில் புணர்ச்சிபோலப்**
**பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு**
**உடனுயிர் போளுகதில்ல கடனறிந்து**
**இருவே மாகிய உலகத்து**
**ஒருவே மாகிய புன்மை தாம் உயற்கே"**
**(குறுந்.பா.எண்.57)**

மருத நிலத்தில் வாழும் மகன்றில் என்னும் நீர்ப்பறவைஆணும் பெண்ணுமாக இணைபிரியாமல் வாழ்வது சிறு பிரிவிலும் துயராற்றதவை. அதுபோல பல பிறவிகளாக அன்புடைமையால் தொடர்ந்துவரும் தலைவனும் தலைவியும் உள்ளத்தாலும் உயிராலும் ஒன்றுபட்டவராயினும் கடமைக்காக இருவேறு உடல்களை எடுத்துள்ளதாகத் தலைவி கூறுகின்றான். களவில் அத்தலைவி தலைவனுடன் கூடி ஒருயிராய் இருந்ததையும் நினைத்துப் பார்க்கின்றாள். உடனுறையும்

நாளில் உயிர் நீங்கப் பெற்றால் தாம் மீண்டும் நட்புடைய காதலராகப் பிறப்போமெனவும் தலைவி கூறுகின்றாள்.

ஒருவர் இறக்கும்போது கொண்ட நினைப்பே அடுத்த பிறப்பிலும் தொடரும். பிறப்பு - மறுபிறப்பு ஆகியன உண்டு என்னும் சிந்தனைகள் இப்பாடலில் வலியுறுத்திக் கூறப்பெற்றுள்ளன.

**'அணிற்பல் லன்ன கொங்குமுதிர்**
**முண்டகத்து" (குறுந்.49)**

என்னும் பாடலைத் திறனாய்ந்த க.காந்தி.

'கணவனை இழந்தை கைம்பெண்டிர் கணவனோடு உடன்மாயவிழைந்து தீப்பாய்தலாகிய உடன்கட்டை ஏறுதலிலோ அல்லது வரை பாய்தலிலோ கைம்பெண்கள் உடன்கட்டை ஏறுவதற்கு ஜி.எல். ஹார்ட் (புடு.ர்யசவ) கூறும் காரணம் எந்தஅளவுக்கு ஏற்புடையது என்பது மேலும் ஆராயத்தக்கது. கைம்மைமகளிர் கணவனின் பிரிவு தாங்குவதற்கு அரியது என்ற நிலையிலும் தன் கணவரோடுமறுமையிலும் சேர்ந்து வாழும் வாழ்க்கை அமைய வேண்டுமென்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் உடன்கட்டை ஏறுதலிலோ அல்லதுவரை பாய்தலிலோஈடுபட்டிருக்க வேண்டும் எனக்கூறி மறுபிறப்பு நம்பிக்கையைமேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

**'ஊழ்" நம்பிக்கையும் இம்மை மறுமையும**

குறுந்தொகைப் பாடல்களில் "ஊழ்" நம்பிக்கையானது இம்மை, மறுமை நம்பிக்கைகளுடன் தொடர்புப்படுத்தியே புலவர்களால் கூறப்பெற்றுள்ளன. பேசி சாத்தான் என்னும் சங்கப்புலவர் இயற்றிய குறுந்தொகையின் குறிஞ்சிப்பாடலில் 'ஊழ்" 'பால்" என்றே கூறப்பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு,

**'பால்வரைந்து அமைத்தல் அல்லது அவர்வயின்**
**சால்பளந்து அறிதற்கு யாஅம் யாரோ?**
**வேறுயான் கூறவும் அமையான்அதன் தலைப்**
**பைங்கண் மாச்சுனை பல்பிணி அவிழ்ந்த**
**வள்ளிதழ் நீலம் நோக்கி உள்ளகைபு**
**ஒழுகு கண்ண ளாகி**
**பழுதன்று அம்ம இவ்வாயிலை துணிவே"**
**(குறுந்.பா.எண்.366)**

இப்பாடலின் தலைவியானவள் அவ்வழிச் சென்ற தலைவனிடம் சுனையின் நீலமலரைப் பறித்துக் கொடுக்க வேண்டிய செயல் ஊழ்வினையால் நிகழ்ந்தது. ஊழ்வினையின் செயலுக்குக் காரணம் காண்பதோ, அவற்றின் தகுதியைஅறிந்து மதிப்பீடு செய்வதோ இயலாத செயலாகும். யாவரும் ஊழ்வழியே இயங்குவோராதலால் தோழி, தலைவியின் ஊழ்வழிப்பட்ட செயலை அளப்பதற்கு யாம் உரிமையற்றவர் என்கின்றான். காப்புமிகுதிக்கானசெவிலி தோழியிடம் வினவியபோது தினைப்புனம் காத்துச் சுனையிடைச் சென்றபோது நிகழ்ந்ததைக் கூறி அறத்தொடு நிற்கின்றான். நீல மலரைக் காரணமாகக் கொண்டு 12 தலைவனும் தலைவியும் தாமே கூடித்தலைப்பட்ட செயல் ஊழின் வழிப்பட்டதுஎனத்தோழி செவிலித்தாய்க் குக் கூறி அறத்தொடு நிற்கின்றாள்

தலைவன் - தலைவியரின் ஊழ்வழிபட்ட தொடர்பும் உறவும் இம்மை- மறுமை என்னும் நிலையில் பிறவிகள் தோறும் தொடரும் என்னும் செய்தி குறுந்தொகையின் குறிஞ்சித்திணையில் இறையனார் என்னும் சங்கப்புலவர் இயற்றிய பின்வரும் பாடலிரும் கூறப்பெற்றுள்ளன. இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் தன் அன்பின் மிகுதியை வெளிப்படுத்தி தலைவியின் நலம் பாராட்டும் தலைவன் தலைவியின் கூந்தல் இயற்கை மணமுடையது என்கின்றாள்.

**'கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்**
**செறி எயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீயறியும் புவே"**
**(குறுந்.பா.எண்.2)**

இப்பாடலின் தலைவன் உயர்ந்த சாதி வண்டாகிய அகச்சிறகுடையதும்பியை

வினித்து தலைவியுடன் தாம் கொண்ட நட்பாகிய காதல் பிறவிகள் தோறும் தொடர்வதால் முற்பிறப்பில் பயின்றது இப்பிறப்பிலும் தொடர்வதாகக் கூறுகின்றான். பயிலாத பொருட்களைக் கண்டவழி அருவருத்து ஒதுக்கும் 'பயிர்ப்பு' என்னும் பண்புடையவன் தலைவி ஆதலின் பயின்றது பொருந்திய நட்பாகியகாதல் எனத் தலைவியுடனான தன் உறவைத் தலைவன் சிறப்பித்துக் கூறுகின்றான். காமப்புணர்ச்சி இருவழி ஒத்தல் ஆதலின் தலைவன் உள்ளப்புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சி ஆகியன நிகழ்வதற்கு முன்னர் தோன்றியகாதல் சிறப்பினை இப்பாடலில் கூறுகின்றான்.

## நிறைவுரை

இக்கட்டுரையின் வாயிலாக குறுந்தொகைப் பாடல்களில் வாழ்வியல் நிமித்தங்கள், நம்பிக்கைகள், ஊழ், சொர்க்கம், நரகம் குறித்த நம்பிக்கைகள் இம்மை, மறுமை போன்ற வாழ்வியல் வெறிகளை உணரமுடிகின்றன.

## ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

1. சண்முகம்பிள்ளை . மு.,- குறுந்தொகை மூலமும் உரையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவுர், 1994.
2. சாமிநாதையர், உ.வே (பதி.ஆ.உரை.ஆ) - குறுந்தொகை மூலமும் உரையும் தியாகராச விலாச வெளியீடு சென்னை, 1962.
3. சோமசுந்தரனார், பொ.வே. - குறுந்தொகை மூலமும் உரையும் (உரை.ஆ) கழக வெளியீடு சென்னை, 1978.
4. அ.பேராசிரியர் (உரை.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம் கழக வெளியீடு, சென்னை, 1969.